சிவமயம்

Registered as a Newspaper in Ceylon
P. M. G. NO. H. A 59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
ஆரம்பமானது.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசு வண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத் ருசு] யாழ்ப்பாணம்:—தாரண வரு பங்குனிமீ ௬உ (1945 மார்ச்மீ 19உ திங்கட்கிழமை) [இல ௬௪

## சகல வகுப்புகளுக்கும் அரசாங்கத்தில் பங்கு வேண்டும்

### ஸ்விஸ் அரசியலமைப்பைப் பின்பற்றவேண்டும்

டாக்டர், ஈ. எம். வீ. நாகநாதன்

அகில இலங்கைத் தமிழர் காங்கிரஸ் ஸோல்பரி கமிஷன் முன் சமர்ப்பித்த திட்டத்தில் சேர்ந்திருந்த சம்பந்தமான பல யோசனைகளைத் தெரிவித்துக்கொண்டிருக்கிறது. இந்த யோசனைகளில், இலங்கையில் கூட்டு மந்திரி சபை ஏற்பட வேண்டும் என்பதும் ஒன்று. இந்த யோசனை, அரசாங்க சபையில் அங்கம் வகித்துவரும் பல வேறு வகுப்புகளையும் சேர்ந்தவர்கள் சட்டபூர்வமாக கூட்டு மந்திரிசபையொன்றை அமைத்துக் கொள்ள வேண்டிய கடமையை வற்புறுத்துகிறது என்ற அபிப்பிராயத்தினால் சிலர் இந்த யோசனையை ஆட்சேபிக்கின்றனர்.

மக்கள் தாமாகவே சுயேச்சையாக கூட்டு மந்திரி சபைகளை ஏற்படுத்திக் கொள்ளுவதென்பது கேள்விப்படாத புதிய விஷயமல்ல.

ஆனால் கட்டாயத்தின் பேரில் ஒரு கூட்டு மந்திரிசபையை அமைத்துக் கொள்வதென்பது உண்மையில் ஒரு புதிய கருத்துத்தான். இதற்கு ஆதாரமாக ஒன்றும் எடுத்துக் காட்டுவதற்கில்லை. ஸ்விஜர்லாந்திலுள்ள ஜனநாயக ஆட்சியில் கூட்டு மந்திரி சபையே எப்போதும் அமைக்கப்படுகிறது. இம்மாதிரி அமைத்துக்கொள்வதற்கு அந்நாட்டின் சம்பிரதாயமே காரணமாக இருக்கிறதேயன்றி, சட்டபூர்வமான கட்டுத்தளை ஏதும் கிடையாது. உண்மையைக் கவனிக்குமிடத்தில், சில சந்தர்ப்பங்களில் சட்டத்தை வேண்டுமானாலும் மாற்றிவிடலாம். ஆனால் வழக்கத்தை அல்லது சம்பிரதாயத்தை மாத்திரம் லேசிலே மாற்றுவதற்கில்லை. எனவே, 'ஸ்விஸ்' ஜனநாயகம் கட்டாயமாக கூட்டு மந்திரி சபை அமைத்துக் கொள்ள ஒரு முன்மாதிரியாயிருப்பதாகக் கருதலாம்.

பிரிட்டனிலுள்ள பார்லிமெண்டரி ஆட்சி முறை சம்பிரதாயங்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளதென்பது தெளிவு. இச் சம்பிரதாயங்கள் சட்டத்தைப்போலவே சக்தியும் உறுதியும் கொண்டவைகளாயிருக்கின்றன. சுயாட்சி பெற்று விளங்கும் ஆஸ்திரேலியா போன்ற பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகள், பிரிட்டிஷாரின் பார்லிமெண்டரி ஆட்சி முறையைப் பின்பற்றி தங்கள் அரசாங்கத்தை அமைத்துக்கொண்டன. அப்போது அந்நாடுகள் இங்கிலாந்திலுள்ள பார்லிமெண்டரி சம்பிரதாயங்களுக்கு ஒத்தவகையில் தங்கள் அரசியல் சட்டங்களையும் அமைத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. நம் நாட்டின் நிலைமைக்குப் பொருத்தமுடைய அவசியமான சில மாறுதல்களுடன், ஸ்விட்ஜர்லாந்து அரசியல் திட்டத்தை ஆதாரமாகக் கொண்டு, ஒரு அரசியல் திட்டத்தை வகுத்து, அதை இலங்கையின் எதிர்கால அரசியல் திட்டமா கக் கொள்ளவேண்டும். இவ்வாறு செய்வதால், அரசியல் திட்டத்தைக் கைக்கொண்டு நடப்பது என்னும் கொள்கைக்குப் பாதகம் ஏற்பட்டு விட்டது.

கலப்பற்ற மந்திரி சபையுடைய பிரிட்டிஷ் கொள்கையின் பிரேமை கொண்ட உங்களுக்குக் கூட்டு மந்திரி சபை விசித்திரமாயும் கசப்பாயுமிருக்கலாம். ஆனால் ஒரு வகுப்பு ஜனங்களுக்குள்ள பிரிட்டனிலிருக்கும் கலப்பற்ற மந்திரிசபை (அதாவது ஒரு கட்சி மந்திரிசபை) பலதிறப்பட்ட வகுப்புவாதிகள் வசிக்கும் இலங்கைக்குப் பொருத்தமானதல்லவென்பதுடன் ஆபத்தானதுமாகுமென அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உறுதியாக அபிப்பிராயப்படுகின்றது.

இலங்கையையும் இந்தியாவையும் போன்ற பலவகுப்பு ஜனங்கள் வாழும் நாட்டிலே எல்லா வகுப்புகளுக்கும் அரசாங்கத்தில் பங்கிருந்தால்தான் சுயாட்சி யென்பது உண்மையான சுயாட்சியாயிருக்கமுடியும். இல்லாவிடில், அரசாங்கம் ஒரு வகுப்பின் அரசாங்கமாகத்தானிருக்கும். ராஜ்யக் கட்சிகள் ஏற்படுமே வரையிலாவது மந்திரிசபை எல்லா வகுப்புகளையும் தழுவிய கூட்டு மந்திரிசபையாயிருக்க வேண்டும்.

கூட்டு மந்திரிசபை ஸ்திரமாயிருக்காதென்று சிலர் கருதலாம். சென்ற 14 வருடகாலமாக நமது மந்திரிசபை ரொம்ப ஸ்திரமாயிருக்கத் தொடங்கிவிட்டது. சிறிதளவு ஸ்திரமற்ற தன்மை, அதாவது மீண்டும் மந்திரிசபை தோன்றிவிடுமோ என்ற அச்சம் மந்திரிகளின் திறமையை அதிகரிப்பதாயும் ஜனநாயக பரிபாலனத்தை வற்புறுத்துவதாயுமிருக்கும். இலங்கையில் நாம் கவலைப்பட வேண்டியது ஸ்திரமற்ற மந்திரிசபை ஏற்படக்கூடாதென்பதைப்பற்றியல்ல. ரொம்ப ஸ்திரமான மந்திரிசபை ஏற்பட்டு சர்வதிகார போக்குத் தலைகாட்டலாகாதென்பதைப் பற்றியேயாகும். பதவிகளில் அட்டைபோல ஒட்டிக்கொண்டிருக்கலாமென்ற நினைப்பு மந்திரிகளுக்கு ஏற்படாமலிருந்தால்தான் நாட்டுக்கு க்ஷேமம் ஏற்படமுடியும்.

பல திறப்பட்ட ஜனங்கள் வசிக்கும் இலங்கைக்கு ஸ்விஸ் ஆட்சிமுறையைப் போன்ற திட்டந்தான் ரொம்பப் பொருத்தமானது. 9 மந்திரிகளடங்கிய மந்திரிசபையில் 4 ஸ்தானங்களுக்குமேல் எந்த ஒரு வகுப்புக்கும் இருக்கலாகாதென்பதுதான் தமிழ்க் காங்கிரஸின் கோரிக்கை. இது நாட்டில் ராஜீயக் கட்சிகள் ஏற்படுவதற்கு உதவிபுரிவதாகவுமிருக்கும்.

## சேமிப்பது செலவழிப்பதற்கே

'சேமிப்பது செலவழிப்பது'தான் என்ற தலைப்புடன் ஸேர். பிரடரிக்ரீஸ் கொழும்பு ஆகாயவசனியின் மூலம் ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார், அப்பொழுது அவர் கூறியதாவது:

'யுத்தம் காரணமாக நாட்டில் சாமான்களும் சேவைகளும் குறைவாயிருக்கின்றன. ஆனால், சாதாரண காலங்களைவிட இப்பொழுது நாட்டில் பணம் அதிகமாகப் பழக்கத்திலிருக்கின்றது. ஜனங்கள் பணத்தை இப்பொழுது அதிகமாகச் செலவிட்டால் அதன்மூலம் நாட்டிலுள்ள சாமான்களின் அளவை அதிகரித்துவிடமுடியாது. பணத்துக்குக் கிடைக்கக்கூடிய சாமான்களின் அளவு மிகக் குறைவாகவேயிருக்கின்றன, எனவே, அதிகபணம் செலவிடுவதென ஜனங்கள் தீர்மானிப்பின் அதன் விளைவாக ஏற்படக்கூடியது சாமான்களின் விலைகள் உச்சாணிக்கொம்பில் ஏறி உட்கார்ந்து கொள்ளுவதுதான். வாழ்க்கைச் செலவுகளும் அதிகரிக்கும்; இதை வேறுவார்த்தைகளினால் வர்ணிக்க வேண்டுமாயின் பணத்தின் மதிப்புக் குறைந்துபோகும். தொழிலாளருக்குச் சம்பளத்தைக் கூட்டினாலும் விலைகள் உயருவதால் இந்தச் சம்பள அதிகரிப்பு அவர்களுக்கு எவ்வித நன்மையும் அளிக்காமல் போய்விடும்.

இக்காரணத்தை முன்னிட்டுத் தற்சமயம் பணத்தைச் செலவிடுவது முட்டாள்தனமானது. செலவிடும் பணம் உண்மையில் அவருடைய வருமானத்தை அதாவது அவருடைய வருமானப் பணத்தின் மதிப்பைக் குறைப்பதாகவேயிருக்கும். இதற்கு மாறாகச் செலவிடுவதை ஒத்திவைப்பதால் அவரது பணத்தின் மதிப்பும் நிரந்தரமானதாக இருக்கும்.

இதே விஷயத்தை வேறுவிதமாகச் சொல்லுகிறேன். நாட்டிலுள்ள சாமான்களின் அளவு கட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் அதிகமாகச் செலவிடும் பணம் இந்தச் சாமான்களுடைய விலைகளைத்தான் அதிகரிக்குமே தவிரச் சாமான்களின் அளவை அதிகரிக்காது. செலவிடுவதை நிறுத்தி வைப்பதினால் விலைகள் உயருவது தடுக்கப்படும்; பணத்தை இப்பொழுது செலவிட்டால் அதிக விலையில் சாமான்கள் இப்பொழுது கிடைப்பதுடன் எதிர்காலத்தில் செலவிடவும் கையில் பணமிருக்காது. இவ்விரண்டு வழிகளில் எது புத்தியானது.

அதிகமாகக் கிடைக்கும் பணத்தை இப்பொழுதே செலவிடுவது புத்திசாலித்தனமல்ல. பணத்தைச் சேமித்து அதிகச் சாமான்கள் நாட்டில் இருக்கும் காலத்திலே செலவிடுவதுதான் புத்திசாலித்தனமானது.

பிரிட்டன் தினசரி 140 லட்சம் பவுண் யுத்தத்துக்காகச் செலவிடுவதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். இதன் அர்த்தமென்ன? பணத்தினால் மட்டும் யுத்தம் நடக்கவில்லை, யுத்தக் கப்பல்கள், போர் விமானங்கள், டாங்கிகள் முதலான பலவற்றைத் தயா… கொண்டே யுத்தம் …

தொடர்ச்சி 6ம் பக்கம்

## ஜெர்மன் சமாதான முயற்சி

மார்ச்மாத ஆரம்பத்தில் ஸ்டாக்ஹோமிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதியை ஜெர்மன் பிரதிநிதிகள் அணுகியது வாஸ்தவம்தான் என்றும் இதுபற்றி சுவீடிஷ் பத்திரிகைகளில் வெளியாகியுள்ள தகவல்கள் சரிதானென்றும் லண்டனில் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது. நேசதேசங்களிடையே பிளவுஉண்டாக்க ஜெர்மனியர் செய்யும் சூழ்ச்சிகளில் இதையும் ஒன்றாகக் கருதி பிரிட்டன் இந்த யோசனையைக் கவனிக்க மறுத்துவிட்டதாக லண்டனிலுள்ள அதிகார வட்டாரங்கள் கூறுகின்றன.

ஜெர்மனியின் சமாதான முயற்சி பற்றி சுவீடிஷ் பத்திரிகையான "ஸ்வென்ஸ் டாக் பிளாட்டில்" வெளியாகியிருக்கும் தகவல் கூறுவதாவது:- ஸ்டாக்ஹோமிலுள்ள சுவீடிஷ் அதிகாரிகள் மூலம் ஜெர்மனி நேசதேசங்களுக்கு ஒரு சமாதான யோசனை அனுப்பி வைத்திருந்தது; ஆனால் அதை நேசநாடுகள் நிராகரித்துவிட்டன. போட்ஸ்டேனில் ஒருநாள் இரவு முழுவதும் நடந்த விவாதத்திற்குப் பிறகு ஹிட்லரும் இந்த சமாதான யோசனைக்குச் சம்மதமளித்தார். தானபிடித்த நாடுகளையெல்லாம் காலியாக்க ஜெர்மனி தயார். ஆனால் ஜெர்மனியில் நாஸி ஆட்சியே நடக்கும்படி நேசநாடுகள் விட்டுவிட வேண்டும் என்பதே அவ் யோசனை. இப்படித் தாங்கள் கோருவதற்குக் காரணம் ஜெர்மன் மக்களிடையே போதிய செல்வாக்குப் பெற்றவர்கள் ஹிட்லரும் ஹிட்லருமாக இருப்பதே என … அவ்யோசனையில் குறிப்பிடப்பட்டதாகத் தெரிகிறது.

மேற்படி சமாதான யோசனையைச் சுவீடனுக்குக் கொண்டுவந்த ஜெர்மன் பிரதிநிதி வான் ரிப்பன்ட்ராப்பின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஹெஸ்ஸி என்பவர்தான் எனத் தெரிகிறது.

## திருப்பிக் கொடுக்க வேண்டும்

ஏகாதிபத்தியக் கட்சிக் கூட்டத்தில் பேசியபோது மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் பின்வருமாறு கூறினார்:-

மாட்சிமைதங்கிய மன்னர்பிரானின் பிரஜைகளாகிய பிரித்தானிய அவுஸ்திரேலியர், இந்தியர், பர்மியர், மலாயர் முதலியோருக்கு ஜப்பானியர் செய்துள்ள அநியாயங்களையும் அட்டூழியங்களையும் நாம் திருப்பிக்கொடுக்க வேண்டும்.

இதைச் செய்யாது நாம் இம்மியத்தையும் யுத்த நிலைமையால் கலைப்படையக்கூடாது.

மேலும் ஐரோப்பாவில் யுத்தம் கோடைகால முடிவிற்கு முன்னாலோ அல்லது மிகவும் அண்மையிலேயோ முடிவடைந்தால் நாம் ஒரு பொதுத் தேர்தலை நடாத்தத் தயங்கவும் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் தாரணஹு
பங்குனிமீ ௬௨ திங்கட்கிழமை

## அரிசிவிகிதம் அதிகப்படுமா?

இங்குள்ள மக்கள் சிலகாலமாகத் தங்கட்குக் 'கூப்பன்'' அரிசி விகிதம் விரைவில் இருமடங்கு உதவப்படுமென்ற கொள்கை யுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்; இவர்களுட் பலர் "வருகிற ஏப்ரில் மாசம் முதலாந் தேதி தொடக்கம் கூப்பனுக்கு இரண்டுபடி யரிசி விகிதம் உதவப்படுமாம் மெய்தானா? என்று வினவவுந் தலைப்பட்டுக் கொண்டனர்; ஆனால், அப்படி மேலதிகமான அரிசி வருமென நாம் எண்ணுவதற்கு எவ்வகையான ஏதுவையும் இற்றைவரையிற் கண்டிலேம்;

பொதுஜனப் பாதுகாப்பாள ராகிய ஸேர், ஒலிவர் குணதிலகை யென்பவர் இந்த அரிசி விஷயத்தில் இப்பொழுது யாதுங் கூறாது மௌனஞ் சாதிக்கின்றார்; ஆனால், சிலமாசங்கட்கு முந்தி அவர் இந்தியாவிற்குச் சென்று மீண்டு இங்கு வந்தபோது உணவுப்பொருள் விஷயமாகத் தாம் அங்குச் சென்ற கருமம் அநுகூலமுற்றதாகவும் இலங்கை மக்கள் இந்தியாவி லிருந்து கூடிய உணவுப் பொருளைப் பெறுதல் முடியுமென்றுங் கருத்துப்பட அந்த நேரத்திற் கூறியுள்ளார், இவருடைய இந்தப் பிற்கூற்றே இங்குள்ள மக்களைத் தமக்கு அதிகம் அரிசி விரைவிற் கிடைக்குமென நினைக்கத் தூண்டியதெனலாம். ஆனால், விவசாய மந்திரி, அரசாங்க சபையில் அரிசி விஷயமாகக் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு, "இப்பொழுது கூப்பனுக்கு ஒருபடி விகிதமாகக் கொடுக்கப்படும் அரிசியை இந்த ஆண்டு முடியும்வரை முட்டின்றிக் கொடுக்கலாமோ என்பதை யிட்டுத் தாம் சிந்திப்பதாகத் தெரிவித்துள்ளார்.

சென்ற டிசெம்பர் மாசம் ஸேர். குணதிலகை ½ படி அரிசியை ஒரு படி அரிசியாக அதிகப்படுத்துவதைப் பற்றித் தெரிவித்த சமயத்தில், பிருத்தானிய உணவுப் பகுதி மந்திரி இலங்கை மக்களுக்கு இந்த 1945-ம் ஆண்டு முத லாறுமாச காலத்திற்கும் அதிக அரிசி உதவுவதாக வாக்களித்தா ரெனத் தெரிவித்திருந்தார்; குறித்த ஆறுமாசங்களுள் இப்பொழுது மூன்று மாசங் கழியலாயின. எஞ்சிய மூன்று மாசங்கட்கும் ஒருபடி விகித அரிசி கிடைக்குமென இங்குள்ள மக்கள் காத்திருப்பதாற் பிழையில்லையென நினைக்கின்றோம்; இந்த ஆறுமாசமும் முடிந்து அடுத்துவரும் ஆறு மாசங்களில் இங்குள்ளார்க்கு உதவப்படும் அரிசி விகிதம் 2 படியா இல்லையேற் பழையபடி அரைப்படியா என்பதுதான் இப்பொழுதுள்ள ஆசங்கையாகும், "அப்பா என்றுவிட்டால் மாத்திரம் உச்சி குளிருமா? இரண்டுபடி யரிசி விகிதங் கிடைக்குமென்று சொல்லி விட்டால் மாத்திரம், நம்பியிருப்பதால் மாத்திரம் இங்குள்ள சனங்களின் உதராக்கினி தணியப்போவதில்லை. ஸேர். குணதிலகை இந்தச் சமயத்தில் அரிசி விஷயத்தைப் பற்றிய உண்மையைச் சொல்லி விடலாம்; இரண்டுபடி அரிசி வருமென நம்பி யிருக்குஞ் சனங்களுக்கு, பின்னர் அரைப்படி யரிசிதான் கிடைக்குமெனத் தெரிவித்தால் வயிற்றெரிச்சல் அதிகப்படும்.

இனி, யுத்த காலத்தைக் காட்டிலும் யுத்தம் முடிந்த அந்திய காலத்திற்றான் அரிசிப் பஞ்சமும், ஏனைய உணவுப் பொருட் பஞ்சமும், மனுஷவாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களெவற்றின் பஞ்சமும் அதிகப்படுமென்பது முந்தி நடந்தமகாயுத்தத்திலே கண்ட அநுபவமாகும்; இந்தக்கருத்துப்படவே இப்பொழுதுபிருத்தானிய பிரதம மந்திரியுந் தெரிவித்துள்ளார்; யுத்தம் முடிந்தாலும், பர்மாதேசம் பிருத்தானியர் வசமானாலும் ஆங்காங்கு விளையும் அரிசியும் ஏனைய உணவுப் பொருள்களும் உடனே இலங்கைக்குவருமென நாம் காத்திருக்க வொண்ணாது; அந்த அந்த நாடுகளில் யுத்தத்தினால் நேர்ந்த குறைகளெல்லாம் நிரம்பிய பின்னர், இப்பொழுது பிருத்தானியர் முதலிய ஐக்கிய ராச்சியத்தினருடன் மாறுபட்டுச் சமர்புரியும் பகையரசர்கள் தோல்வியுற்றால் அப்படித் தோல்வியுற்ற நாட்டினர்க்கு அரிசி உதவப்பட்ட பின்னரே எங்கள் நாடுகளுக்கு அரிசி கிடைக்குமெனக் காத்திருக்கலாகும். இஃதன்றி இலங்கையிற் செய்யப்படும் விவசாயத்தினால் இலங்கை மக்களுக்குப் போதிய அரிசியும ஏனைய உணவுப் பொருள்களுங் கிடைக்குமென நினைத்தல், சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேருமெனக் காத்திருத்தல்போல் அசம்பாவிதமாகும். இப்படி யெல்லா மிருத்தலால் இங்குள்ள மக்கள், "பிச்சை வேண்டாந் தாயே, நாயைப்பிடி'' என்றவிதமாக இரண்டுபடி யரிசியை எதிர்பார்த்து மோசம் போவதைவிட்டு இப்போதைக்குக் கிடைக்கிற ஒருபடி யரிசியோடு திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டும்.

## எல்லைக்காந்தி விடுதலையானர்

### கான்சாகிப் பதவி ஏற்றதும் முதலாவது உத்தரவு

பெஷாவர், மார்ச் 16

வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் டாக்டர் கான் சாகிப் பிரதம மந்திரி பதவி ஏற்றதும் எடுத்துக் கொண்ட முதலாவது நடவடிக்கை தமது தமையனும் எல்லைப்புறக் காந்தி யெனப்படுபவருமான கான் அப்துல் கபார்கானையும் மற்றும் எட்டுப் பாதுகாப்புக் கைதிகளையும் உடன் விடுதலை செய்யும்படி உத்தரவு பிறப்பித்ததுதான். விடுதலையானவர்களில் நால்வர் சட்டசபை அங்கத்தினர்கள்.

கான் அப்துல் கபார்கான் இன்று மாலை பெஷாவருக்கு வந்து சேருவாரென்று எதிர் பார்க்கப்படுகிறது. அவரை அழைத்துவர ஒரு ஸ்பெஷல் பொலீஸ்வண்டி ஹரிபூருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது; விடுவிக்கப்பட்டுள்ள பாதுகாப்புக் கைதிகளில் மஜி கல்வி மந்திரியான காஜி அட்டுல்லாவும் அமீர் முகமது, அப்துல் அஸீஸ், ஸ்ரீ கேவல் ராம் ஆகியோர்களும் குறிப்பிடத்தக்கவர்களாவர். இந்நால்வரும் எல்லைப்புறசட்டசபை அங்கத்தினர்களாகும்.

மாடுகள் விற்பனை

வண்டில் மாடுகள், நாம்பன் மாடுகள்
சாவுகச்சேரியில்
ஹென்ஸ்மன் வளவில்
24-ம் பங்குனி 1945
8 — 12 மணிக்கு இடையில்.

J. T. Hensman.

Mis 538 15 19/22-3-45

# இலட்சுமிகாந்தம் கொலைவழக்கு

## எதிரிகள் உயர்தா நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டனர்

குறித்த வழக்கிற் சம்பந்தப்பட்ட (1) M. வடிவேலு (2) நாகலிங்கம் (3) தியாகராச பாகவதர் 4, N. S. கிருஷ்ணன் (5) ஸ்ரீராமுலுநாயுடு (6) ஆரியவீரசீனன் (7) A இராசபாதர் (8) P ஆறுமுகம்பிள்ளை யென்னும் எண்மரும் சென்னை மாகாண நீதிதலத்தில் விசாரணை செய்து இப்பொழுது உயர்தர நீதிமன்றத்து விசாரணையின் பொருட்டுப் பாரப்படுத்தப்பட்டுள்ளனர். பாரப்படுத்தும்போது நீதிபதியாகிய உஸ்மான் அலி யெனபவர் அவர்களைத் தனித்தனி நோக்கி உங்கட்காகிய நியாயங்களைச் சொல்ல வேண்டுமானால் இப்பொழுது சொல்லுங்கள் என்று கேட்டனர்.

முதலெதிரியாகிய வடிவேலு இந்த நீதிதலத்தில் தம் பக்கத்திற்குரிய சாட்சிகளை விசாரணைக்கு எடுத்தற்குத் தமக்கு இஷ்டமில்லையென்றும் உயர்தர நீதிமன்றத்திலேயே தம்சாட்சிகள் விசாரணை செய்யப்பட வேண்டுமெனவுங் கேட்டுக் கொண்டு பின்வருங் கருத்தமைய எழுதிக் கொடுத்திருந்தார்:—

"நான் இந்தக் கருமத்தில் எவ்வகையான குற்றத்தையுஞ் செய்யவில்லை; லட்சுமிகாந்தத்தைக் கொல்லும் நோக்கம் எனக்கில்லை; நான் அநியாயமாக இந்த வழக்கிற் சேர்க்கப்பட்டேன்; குறித்த கொலை நடந்த தினத்தன்று நான் அந்த இடத்திற்குப் போகவுமில்லை: அச்சமயத்தில் என் நியாயவாதி வீட்டிலிருந்தேன்; நாங்கள் குடியிருந்த குடிசைவீட்டு விஷயமாக லட்சுமிகாந்தம் என்மேலும், சானகியம்மாள் மீதும் ஒரு வழக்குத் தொடர்ந்திருந்தார்; அதனையிட்டு யோசிக்கும்படியே குறித்த அந்தத் தினத்தில் என் நியாயவாதி வீட்டிற்குப் போயிருந்தேன்: ஜயாநந்த னென்பவரை முந்தி ஒருபோதும் நான் அறியேன்; அவர் எனக்கு விரோதமாகச் சொன்ன சாட்சியம் அத்தனையும் உண்மையல்ல''

நீதிபதி: உம்மீது இப்படி வழக்குத் தொடர்ந்தமைக்கு நீர் ஏதுங் காரணங்காட்டக் கூடுமா?—நான் உயர்தர நீதிமன்றத்திற் காட்ட எண்ணியிருக்கின்றேன்.

2-ம் எதிரியாகிய நாகலிங்கமும் தம் சாட்சிகளை மேல் நீதிமன்றத்து விசாரணை செய்விக்க விரும்பியதாகச் சொல்லிவிட்டுத் தம் முறைப்பாட்டைப் பின்வரும் வண்ணங் கூறினார்:—"இந்தக் கொலை விஷயமாக நானொன்று மறியேன்; நான் இலட்சுமிகாந்தத்திற்கு விலைக்குப் பால் கொடுத்து வந்தேன்; அவருக்கும் எனக்குமிடையில் எவ்வகையான பகையுமில்லை; அவர் இருக்குந் தெருவுக்கு அடுத்த தெருவிலேதான் நான் வசிக்கின்றேன்; இக் குற்றச்சாட்டில் நான் அநியாயமாக இழுக்கப்பட்டிருக்கின்றேன்''

நீதிபதி: ஏன் உம்மை அநியாயமாக இழுத்தார்க ளென்பதற்கு நீர் ஏதும் ஞாயஞ் சொல்லக் கூடுமோ?—அந்த ஞாயத்தை மேல்நீதிதல விசாரணையின்போது கூற விரும்புகின்றேன்.

(3) தியாகராச பாகவதர் தமக்குரிய சாட்சிகளை மேல நீதிமன்றத்தில் விசாரணை செய்விப்பதாகச் சொல்லிவிட்டுத் தம் முறையீட்டைக் கூறினர்;— "லட்சுமிகாந்தம் கொலை சம்பந்தமாக நான் யாதொன்று மறியேன்; அவனைக் கொலைசெய்யவேண்டு மென்ற நோக்கம் என்னிடத்தில் ஒருபோது மில்லை; குறித்த நவம்பர் மாசம் 7-ந் திகதி நான் உவசல்ற்றாய்க்ஸ் நாடகசாலைக்குப் போனதேயில்லை; இந்தக் கொலை விஷயமாக நான் எவருடனும் ஏதும் பேசியதுமில்லை; என் பணஞ் செலவிட்டதுமில்லை; எனக்கு விரோதமாகச் சொல்லப்பட்ட சாட்சியங்கள் சொன்னவை யெல்லாம் பொய்''

நீதிபதி: சாட்சிகள் ஏன் அப்படிச் சொல்லுகிறார்க ளென்பதற்கு நீர் ஏதும் காரணம் சொல்லமுடியுமோ?—பொறாமை காரணமாகவும் பிறருடைய தூண்டுதலினாலுந்தான் அப்படிச் சொல்லுகிறார்களென நினைக்கிறேன்; இந்த எதிரிகளுள் கிருஷ்ணனையும் இராமுலுநாயுடுவையும் தவிர வேறெவரையும் முந்தி நான் அறியேன்.

(4) N. S. கிருஷ்ணன் கூறியவை: "நான் என்பக்கச் சாட்சிகளை மேல் நீதிமன்றத்திலேதான் விசாரணை செய்விக்க விரும்புகிறேன்; நான் இந்த விஷயத்தில் எவ்வகையான தவறையுஞ் செய்ததேயில்லை; லட்சுமிகாந்தத்தைக் கொலை செய்தவர்களுள் எவரோடாயினும் நான் சேர்ந்ததில்லை இந்த விஷயமாக எவரோடும் நான் பேசியதில்லை, எவர்க்காயினும் துணை செய்ததுமில்லை; நவம்பர் 7-ல் குறித்த நாடகசாலையிற் கூட்டங்கூடிச் சதியாலோசனை செய்ததுமில்லை. நவம்பர் 1-ல் தொடக்கம் 13-ல் வரையில் நான் சென்னையில் தங்கவில்லை. நான் அந்தநாட்களில் சேலத்திலிருந்தேன். இதனால் இந்த விபரீதியம் சம்பந்தமான விவகாரங் ளொன்றையும் நான் அறியேன்,

நீதிபதி: நவம்பர் மாசம் 7ந் தேதி உம்முடைய மோட்டார் ரதத்திற்கு எண்ணெய் கொடுத்ததாகச் சாட்சியுண்டு.—அதைப்பற்றி நான் ஒன்று மறியேன்.

(5) S M. ஸ்ரீராமுலு நாயுடு:— "என்பக்கச் சாட்சிகளை மேல் நீதிதலத்திலேதான் விசாரணை செய்விக்க விரும்புகிறேன்; நான் இந்த வழக்கில் எவ்வகையிலுங் குற்றவாளியல்லேன்; இலட்சுமிகாந்தத்தைக் கொல்வதற்கு இந்த ஜயானந்தனோடாக, ஏனைய எதிரிகளோடாக, வேறு எவரோடாகவாவது நான் சதியாலோசனை செய்ததில்லை. 1944-ம் ஆண்டு ஜனவரிமீ உட்லண்ட் விடுதிச்சாலையில் நடந்ததாக விஷயமெனச் சொல்லப்பட்ட சாட்சியம் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதுமல்ல; என்னை இக்கொலையிற் பந்தப்படுத்தக்கூடியதுமல்ல; ஜயானந்தன் சொன்ன சாட்சியம் முழுவதும் பொய்; அந்தக் காலத்தில் தியாகராச பாகவதர் நடத்திய சபாஷணை சம்பந்தமாகச் சொன்னவை தொடர்பற்றவை; இராமண்ணா சொன்ன சாட்சியமும் பயனற்றது; இந்தக் கொலை வழக்கில் என்னையும் சம்பந்தப்படுத்தக்கூடிய உண்மையான சாட்சியம் ஏதுமில்லை; ஆனதால் என்னை நிரபராதியாக இக்கொலைசம்பந்தப்படாதவனெனக் கணிக்கவேண்டும்படி கேட்கிறேன்.

நீதிபதி: இவைகளைத் தவிர நீர் சொல்லவேண்டியவை ஏதுமுண்டோ?—இல்லை.

(6) ஆரியவீரசீனன்:— "என்பக்கச் சாட்சிகளை இந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்ய எனக்கு விருப்பமில்லை; மேலமன்றத்தில் விசாரிக்கலாமென்று சொல்லலாம். இலட்சுமிகாந்தம் என்னுடைய உறவினருமல்ல; நான் அவருடைய பகைவனாயுமிருந்ததில்லை.

தொடர்ச்சி 5 ) பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெற்றி பெறும் இரஹஸ்யம்

'வெற்றி பெறும் இரஹஸ்யம்' எல்லோருமறிந்த ரகசியமாகும். ஒவ்வொருவரும் இதைப்பற்றி ஏதேனும் சொல்லச் சக்தியுள்ளவர்களேயாவர். அதன் சூட்சும தர்மங்களை விளக்கமாக நீங்கள் அடிக்கடி கேட்டிருக்கிறீர்கள். ஆனால் இவ்விஷயம் மிகவும் முக்கியமான விஷயமாகையால் ஜனங்களின் மனத்தில் ஆழமாகப் பதிவதற்கு எவ்வளவு தடவை அழுத்தமாகச் சொன்னாலும் பொருந்தும்.

### முதலாவது தர்மம்— வேலை, செய்கை

வெற்றி பெற வேண்டியதற்கு முதல் தர்மம்—வேலை, செய்கை. நம்மைச் சுற்றியுள்ள பிரகிருதியினிடம் இந்தக் கேள்வியை முகமுகமாய்க் கேட்டுப் பார்ப்போம். ஓடிக்கொண்டேயிருக்கும் அருவிகளைப் பார்த்த போதிலும் சரியே, கிலைபெற்றுப் போதிக்கும் கற்களைக் கண்டாலுஞ் சரியே, எல்லாம் தீர்க்கமான தொனியுடன் இடைவிடா வேலையைத்தான் நமக்குப் போதிக்கின்றன; விளக்கொளி நமக்குப் பார்க்கும் சக்தியைத் தருகின்றது; எல்லா வஸ்துக்களின் இருட்டையும் விலக்குவது விளக்கு அல்லது ஒளி; ஆதலால், நம் கேள்வியை விளக்கு எவ்வாறு விளக்கிக் காட்டுகிறது என்று பார்ப்போம்; சாதாரணமாக நமக்கு வெளிச்சத்தைக் கொடுக்கும் விளக்கையே எடுத்துக்கொண்டு விளக்கக் காட்டுகின்றேன்; விளக்கின் ஜோதிக்கும் பிரகாசத்துக்கும் ஆதாரமாக இருக்கப்பட்ட இரகசியம் என்ன? அது தனனிடமுள்ள திரியையும் எண்ணெயையும் காப்பாற்றுவதில்லை, அவ்வளவேயாம். எண்ணெயும் திரியுமாகிய அதனைச் சுற்று அகம் இடைவிடாமல் எரிந்துகொண்டேயிருக்கிறது; அதனால் ஜோதி உண்டாகிறது; 'அதுதான் ரகசியம்' என்று விளக்கு எங்களுக்குப் போதிக்கிறது. உங்களை நீங்கள் இரட்சித்துக்கொள்ள விரும்பினால் உடனே அழிந்துபோக வேண்டும். 'சரீரங்கள் களைப்பாற வேண்டும்' என்றும், 'சுகம் பெற வேண்டும்' என்றும் விரும்பினீர்களானால், இந்த சுகங்களை அனுபவிப்பதிலும், டாம்பீக விஷயங்களிலும் உங்கள் காலத்தைப் போக்குங்கள்! உங்களுக்கு வேறு கதி கிடையாது. செயற்கையற்றிருத்தல் என்பது மரணத்தையே கொடுக்கும்; வேலை செய்யவேண்டும்; வேலை பாத்திரமே ஜீவவாழ்க்கையாகும்; நீர் நிலைபெற்றிருக்கும் குட்டையையும் ஓடிக்கொண்டிருக்கும் அருவியையும் பார்! ஒலிக்கின்ற ஆற்றின் தெள்ளியவாறு எப்போதும் புத்தாயத் தெள்ளவாகவும் டாமைவக்கு வச்சாடுள்ளதாகவும், சாட்டக் கூடியதாகவும் இருக்கின்றது; குட்டை தண்ணீரோ எவ்வளவு அருவருக்கத்தக்கதாய்த் துர்க்கந்தமுள்ளதாய், அழுக்கும் ஆபாசமுமடைந்து, நாற்றமுடையதாகவிட்டதைப் பாருங்கள்! நீங்கள் ஜெயம்பெற வேண்டுமானால் நதியின் அருவியை—இடைவிடாத ஓட்டத்தை, செயலைக் கைப்பற்றுங்கள்! [illegible] [illegible] [illegible] கைவிடுங்கள்! [illegible] [illegible] [illegible] [illegible] வேலை செய்துகொண்டிருங்கள்! வேலை, காரியம், ஓட்டம் [illegible] [illegible] முதல் தர்மம். [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] எவ்வளவு [illegible] எவ்வளவு [illegible] [illegible] விளங்கவும்.

### இரண்டாவது தர்மம்— தன்னலத்தியாகம்

வெள்ளைநிறம்பொருந்திய வஸ்துக்களை விரும்பாதாரில்லை. சர்வசனப் பிரீதிக்கும் விஷயங்களாக அவை எவ்வாறு ஆயிற்று என்ற காரணங்களை அறியப் பார்ப்போம். வெண்மையினது வெற்றியைக் கண்டுபிடித்துக் கணக்கிடுவோம். கருமை நிறம் பொருந்திய விஷயங்கள் எல்லோராலும் வெறுக்கப்படுகின்றன; அலட்சியஞ் செய்யப்படுகின்றன; வேண்டாமென்று மறுத்து விடப்படுகின்றன; இதுதான் உள்ளவிஷயம்; இதற்குக் காரணம் கண்டுபிடிப்போம். 'நிறம் எவ்வாறு உண்டாகின்றது'? என்ற உண்மையைச் சக்தி தத்துவநூல் காக்கப் போதிக்கின்றது! சிவப்பு நிறம் பொருந்திய வஸ்துவில உண்மையாகச் சிவப்பு நிறமில்லை; பச்சையிலும் பச்சையில்லை; கறுப்புங் கறுப்பல்ல; எந்த வஸ்துவுந் தோன்றுகிறபடி அமைந்திருக்கவில்லை; ரோஜாமலரின் சிவப்பு நிறம் எவ்வாறு உண்டாகின்றது? அந்த மலர் சிவப்பு நிறத்தை வெளியே தள்ளி விடுகின்றது; பிரதபலிக்கச் செய்கின்றது; சூரியவெளிச்சத்திலிருந்து இந்தச் சிவப்பைத் தவிர மற்றைய நிறங்களைத் தன்னுள்ளேயே அடக்கிக்கொண்டு விட்டது. இவ்விதம் தன்னுள் அடக்கிக்கொண்டதாக இருக்கும் நிறங்களை இதற்குச் சொந்தமென்று எவருஞ் சொன்னது கிடையாது. பசுமை நிறம் பொருந்திய இலை வெளிச்சத்தின் மற்றைய நிறங்களையெல்லாம் தனக்குள் அடக்கிக்கொண்டு பசுமை நிறத்தை மாத்திரம் தனக்கு வேண்டாமென்று மறுத்து விலக்கி விட்டது. இவ்விதம் அதற்கு வேண்டாததாய் மறுத்துவிட்ட நிறமே அதற்குச் சொந்தம் போலத் தோன்றுகிறது; கறுப்புநிறம் பொருந்திய வஸ்துக்கள் எல்லா நிறங்களையும் அடக்கிக்கொண்டு பிரகாசத்தை—வெளிச்சத்தை விடுவதில்லை; அவ்வித தியாகஞ் செய்யுந் தன்மையும், தாமதிக்கின்றதையும் கறுப்பு வஸ்துக்களிடம் இல்லை; ஒளிதரும் கிரணங்களில் ஒன்றையாவது தியாகஞ் செய்வதில்லை. அவைகள் வெளியிலிருந்து அடைகின்ற பொக்கிஷத்தில் சிறிதளவுகூட வெளிப்படுத்துவதில்லை. அவைகளின் சொரூபம் உங்களுக்குப் போதிப்பதென்ன? தான் அடையும்பொருள்களில் அற்பமேனும் அன்னியனுக்குக் கொடுக்காதவன் கறுப்புக்குச் சமானமாவான்; கரியைப்போலக் கறுப்பு அவனுக்குச் சொந்தமாகிறது; ஈகைக் குணத்தால்லவே ஊழிய அடைய முடியும்; வெண்மையைப்போல விளங்குவதன் ரகசியம் என்ன! சர்வ சுகத் தியாகம்! நமக்குக் கிடைப்பதையெல்லாம் அயலாருக்கு உடனே கொடுத்துவிடுவதுதான்; வெண்மையான வஸ்துக்களுக்குரிய இந்தக் குணத்தை அவலத்து [illegible] நீங்களும் கைக்கொள்ளுங்கள்; ஜெயமுள்ளவர்களாவீர்கள்; வெண்மையென்று நான் ஐக்கியமாகக் குறிக்கின்றேன் என்று நீங்கள் கொள்ளுகிறீர்கள்! அவர்களை மாத்திரமல்ல, தெள்ளிய கண்ணாடி, வெள்ளைநிறம் பொருந்திய வைரங்கள், பளிங்கு, வெள்ளி, மற்றும் சுத்தம், தாமம் இவற்றையே குறித்துக் காட்டும் வஸ்துக்கள் ஆகியனவெல்லாம் உங்களை உயர்த்துபவர்களாக இருக்கின்றன. ஆதலால் தியாகத்தைக் கைக்கொள்ளுங்கள்! [illegible] [illegible] களையெல்லாம் பிறருக்கே விட்டுவிடுங்கள்! தனக்குவேண்டியே அடக்கிக் கொள்வதாகிய தன்னலத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டாம்! வெள்ளையாகவேயிருக்கவேண்டும்; ஒரு விதையானது மரமாக வளரவேண்டுமானால் முதலில் தான் அழிய வேண்டும்; இவ்விதம் பரிபூரணத் தியாகத்தால் ஏற்படுவது பூரண பலனேயாம்; நாமெல்லோரும் எவ்வளவுக்கெவ்வளவு அறிவு என்ற ஜோதியைக் கொடுக்கின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாய் ஜோதி பெறுவோம் என்பது நிச்சயம். உபாத்தியாயர்களாயுள்ளவர்களெல்லாரும் இதற்குச் சாட்சிகளாய் இருப்பார்கள்.

—சிவதொண்டன்.

### வீரபத்தினி—(நாடகம்)

உடுவில் மான் ஆங்கில பாடசாலை மண்டபத்தில் மேற்படி பாடசாலை மாணவர்கள் டாக்டர் சுப்பிரமணியம் JP. அவர்களின் ஆதரவின்கீழ் வெள்ளிக்கிழமை (9-3-45) அன்று இரவு வீரபத்தினி என்னும் சிறந்த நாடகத்தை நடித்தார்கள்.

சிலப்பதிகாரத்தைத் தழுவிய இந்த நாடகத்தைத் தொகுத்து வசனங்களை யமைத்தவர் இப்பாடசாலை ஆசிரியருள் ஒருவர் ஆகிய கோவலன் வேஷத்தில் தோன்றுபவர் என்று அறிகிறோம். கதையின் போக்கு ஸ்வாரஸ்யம், முதலியன நன்கு அமைந்திருக்கின்றன. மணி மணியான வசனங்கள்.

முக்கியமாக விசேஷமான அம்சங்கள் மாதவியின் நடனங்கள் கள்வனின் ஆட்டம், வெட்டுப் பாறையில் கோவலன் பிரலாபம்.

மாதவி, கௌந்தியடிகள், சிவன்—இம்மூன்று வேஷங்களையும் தாங்கிய சிறுவன் அபாரமாக நடித்தும் பாடியுமிருக்கிறான். வெகு அருமையான சாரீரம் வாய்த்த இவன் நன்றாக நாட்டியமும் ஆடுகின்றான். இரண்டாவதாகக் கள்வனாக நடிப்பவனின் சிரிப்பு உடை, ஆட்டம், பாட்டெல்லாம் அந்த வேஷத்துக்கென்றே அந்த நடிகன் பிறந்தானோ என்று சந்தேகிக்கச்செய்கிறது.

மூன்றாவதாக வெட்டுப் பாறையில் வசனங்களை உணர்ச்சியுடன் ரஸிக்கத்தக்க முறையில் பேசிய ஆசிரியர் நாடகத்தில் அதிக வசனம் நன்றாயிராது என்ற தப்பபிப்பிராயத்தைத் தகர்த்தெறிந்துவிட்டார்.

இந்த நாடகத்தை வேறு பல இடங்களிலும் நடிக்க உத்தேசித்திருப்பதாகத் தெரிகிறது. நாடக மேடையில் எல்லோரும் பார்க்கவேண்டிய புதுமுறையான நாடகம் வீரபத்தினி.

—நடிகன்

### குருநாக்கல் சைவ மகாசபை

மேற்படி சபையின் ஆதரவில் 11-3-45 பிற்பகல 7 மணியளவில் சைவத்தொண்டர்கள் கூட்டமொன்று கூடியது. அப்பொழுது மாகாணக் கணக்குத் தலைவர் ஆ. சுப்பிரமணியம் C.C.S. அவர்கள் தலைமை வகித்தார். வடமேல் மாகாண வட்டார வித்தியாதரிசி ஆ. வி. மயில்வாகனம் B. A. அவர்கள் "சிவராத்திரியின் மகிமை" என்னும் விஷயம்பற்றிச் சபையோர் மகிழ ஓர் அரிய சொற்பொழிவாற்றினார், கூட்ட முடிவில் சிவபூசை பக்தியோடு நடந்தது, பிரசாதமும வழங்கப்பட்டது. அடுத்தநாள் (12-3-45) சபையோர் யாவரும் பூர்ணவாமம் [illegible] விரதம் அனுஷ்டிப்பதாகத் தீர்மானித்து வேண்டிய ஆயத்தங்களும் செய்தனர். கூட்டம் 9 மணியளவில் தேவாரபாராயணத்துடன் கலைந்தது.

—நிருபர்.

# வைசூரிநோய்ச் சகாயநிதி

யாழ்ப்பாணம் பட்டினசங்கத் தலைவர் பின்வருமாறு தெரிவிக்கின்றார்.

(வைசூரி நோய்வாய்ப்பட்டு வருந்தியவர்களுக்கு அக்காலத்தில் மத்திய ஸ்தலஸ்தாபன அதிகாரிகளேனும் இங்குள்ள பட்டின சங்கத்தாரேனும் பால்பழம் முதலியவற்றைத் தம் பொறுப்பி லுதவுதற்கு அதிகாரமில்லாதிருந்தபோது நான் இங்குள்ள பிரபுக்களை இவ்விஷயமாகப் பணவுதவி செய்யும்படி விண்ணப்பஞ் செய்தேன், என் வேண்டுகோளுக்கிசைந்து அச்சமயத்தில் பணவுதவி செய்த அபிமானிகளின் பெயரையும் தனித்தனி உதவிய பணத்தொகையை நன்றியறிதலுடன் தங்கள் பத்திரிகை மூலமாகத் தெரிவிக்கின்றேன்.)

| | ரூ | சதம் |
|---|---|---|
| திரு. S. சுப்பிரமணியம் | 500 | 00 |
| ,, S.S. நாகலிங்கம் (NOBCo | 150 | 00 |
| ,, எஸ். எஸ்மால்ஜீஅசீஜீ | 101 | 00 |
| ,, எஸ். நடேசன் | 100 | 00 |
| ஜனாப்.S. M. மொகமத் மொகிதீன் | 100 | 00 |
| M. C. S. சகோதரர்கள் | 100 | 00 |
| திரு. V. அருணாசலம் | 100 | 00 |
| S. வீரகத்திப்பிள்ளை மக்கள் | 100 | 00 |
| M. A. டொசாஜி கம்பனியார் | 50 | 00 |
| திரு. K. K. கந்தையாபிள்ளை | 50 | 00 |
| ,, S. S. குமாரசுவாமி | 50 | 00 |
| N. மகமத் சாய்பு கம்பெனியார் | 50 | 00 |
| ஸ்டேர்லிங் | 50 | 00 |
| திரு. V. A. துரையப்பா | 50 | 00 |
| ,, A. K. T. தனநாயகம் | 50 | 00 |
| ,, N. P. M. C. பொன்னம்பலம் | 50 | 00 |
| M. M. L. சகோதரர் | 50 | 00 |
| திரு.T. இராமரத்னம் செட்டியார் | 30 | 00 |
| ,, P. இரகுபதி | 10 | 00 |
| ,, S. பதஞ்சலி | 10 | 00 |
| ,, P. நாகலிங்கம் | 10 | 00 |
| ,, W. முத்துக்குமாரசுவாமி | 10 | 00 |
| ,, A. தனபாலசிங்கம் | 10 | 00 |
| ,, T. முத்துசாமிப்பிள்ளை | 15 | 00 |
| ,, M. பாலசுந்தரம் | 10 | 00 |
| ,, M. சிதம்பரநாதன் | 10 | 00 |
| ,, S. விசுவலிங்கம் | 10 | 00 |
| ,, A. கனகசபை | 10 | 00 |
| காதி. S. M. அபூபக்கர் | 10 | 00 |
| திரு. S. குமாரசூரியர் | 10 | 00 |
| ,, J. F. பொன்னம்பலம் | 10 | 00 |
| ,, S. R. கனகநாயகம் | 10 | 00 |
| ,, C. வன்னியசிங்கம் | 10 | 00 |
| ,, A. சண்முகம் | 10 | 00 |
| ,, A. அருளம்பலம் | 10 | 00 |
| ,, P. காசிப்பிள்ளை | 10 | 00 |
| ஒரு நண்பர் | 10 | 00 |
| ஒரு அனுதாபி | 10 | 00 |
| ஒரு அனுதாபி | 10 | 00 |
| V. சோமசுந்தரம் | 10 | 00 |
| A. சம்பந்தன் | 10 | 00 |
| முதலியார், S. கந்தையா | 10 | 00 |
| இ. இ. காங். டா. டிஸ்திரிக் சபை | 20 | 00 |
| | 1996 | 00 |

க. பொன்னம்பலம்
யாழ்ப்பாணப் பட்டினசபைத் தலைவர்.

### தாவடி வாலிபர் கழகம்

மாசி மாதத்தில வருடந்தோறும் வரும் மகாதினமாகிய "சிவராத்திரி" தினத்தைக்கழகத்தாரால் 12-3-45 திங்கட்கிழமை இரவு தாவடி வேத விநாயகர் கோவிலில் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் "சிவராத்திரியும் அதன் பயனும்" என்னும் விஷயம்பற்றி ஒரு சிறு சொற்பொழிவும், தேவாரம், பஜனை சிவநாமம் முதலியவைகளும் பக்க வாத்தியங்களோடு நடைபெற்றது. சென்ற நாலு மாதமாக தாவடி வாலிபர் கழகக் கோஷ்டியாரால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், சதுர்த்தி, அமாவாசை முதலிய புண்ணிய காலங்களிலும் கிரமமாய்ப் பஜனை நடந்துவருகிறது.

—நடித.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையும் விஞ்ஞானமும்

ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி ஐயரவர்கள், B.A., B.L.

மயிலைத் தமிழ்ச் சங்கத்திற் செய்த பிரசங்கத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதியது.

( முற்றொடர் )

இயற்கையிலுள்ள பொருள்களை நாம் அறிய அறிய, அவற்றின் நுட்பங்களை நாம் தெரியத்தெரிய, அவற்றின் விந்தை மேன்மேலும் மிகுந்து கொண்டே வருகிறது. பாவம் நிறைந்த மனத்தோடு விஞ்ஞான விஷயங்களை நாம் பார்க்கும்போதெல்லாம் அவற்றுள் ஒவ்வொன்றும் ஒரு விந்தையாகவே தோன்றுகிறது. பசும் புல்லும், வானில் ஒளிவீசிச்செல்லும் நக்ஷத்திரமும், சிற்றெறும்பும், சிறு மணலும், பறவையின் முட்டையும், மரப்பொந்தில் வாழும் தேரையும், தரையில் புரண்டுபடரும் கொடியும், வைகையிலுள்ள சிறுகிளும், தலை குனிந்து புல்லை கறிக்கும் பசுவும், அறபச் சுவைபெயும இவற்றுள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று தாழ்வுபடாமல் மனத்தைப் பிரமிக்கச் செய்யும் ஓர் அற்புதம் என்று விட்மன் கூறுகிறார்.

வீட்டில் விளக்கு எரியும்போது எங்கிருந்தோ ஓடிவந்த விட்டில் அதைச் சுற்றிச்சுற்றிப் பறப்பது எல்லாரும் காணும் சாமானியக் காட்சி. ஆங்கிலக்கவி ஒருவர் இதைப்பற்றி மிகவும் அழகான பாட்டு ஒன்றைப் பாடியிருக்கிறார். இருள் செறிந்த இரவிலே, புஷ்பங்கள் மலர்ந்து கமழும் வேளையிலே, மெல்லென வீசும் காற்றில் அலைவுறுமசிறுவிளக்கின் சுவாலையானது ஆலோசமாதும கடலிடையே அழிவுறாது நிற்கும் சிறு தீவைப் போலக் கவியின் கண்களுக்குத் தோன்றுகிறது. சாற்றில் அசையும் சுவாலை இருட்டில ஒளிதருகுகும விட்டிலை 'வா, வா' என்று அழைப்பதுபோல அவருக்குத் தோன்றுகிறது. அழகிய பட்டாடை அணிந்து, இளமையும் வனப்புமிகுந்து, தியல விழிதழகூழும் மங்கையைப்போல் விட்டில அவருக்குக் காட்சிகொடுக்கிறது. மோகனவலை வீசும அழகிய கணகளை மலரா விழித்துப் பனியிலும் மென்மையான தனையுடைய இறகுகளைமீதல மெல்லெனவிரிந்து மனம மயங்க, மதிமயங்கித் தன காதலனும் ஒளிச்சுடரை ஆசைபோடு அது காணவருவதுபோல அவருக்குத் தோன்றுகிறது. அப்படியான வந்

ஞான விஷயம் ஒன்றிலிருந்து அழகான கவி ஒன்று பிறந்துவிட்டது.

பாம்பைக் கண்டு அஞ்சாதவரும் இல்லை. அதன் அழகில் ஈடுபடாதவரும் இல்லை என்று சொல்லலாம்.

நாதர்முடி மேலிருக்கும் நாகப்பாம்பே
நச்சுப்பையைவைத்திருக்கும் நல்லபாம்பே
பாதலத்தில் குடிபுகும் பைகொள்பாம்பே
பாடிப்பாடி நின்றுவிளை யாடுபாம்பே, 1
வளைபுகும் போதேதலை வாங்கும்பாம்பே
மண்டலமிட் டுடல்வளை வண்ணப்பாம்பே
தலைக்காஞ்சி நின்றிடும் சத்தியப்பாம்பே
தலைபெடுத் தேவிளை யாடுபாம்பே, 2
குற்றமற்ற சிவனுக்குக் குண்டலமானாய்
கூறுந்திரு மாலினுக்குக் குடையானாய்
கற்றைக்குழல் பார்வதிக்குக் கங்கணமானாய்
காவாமல் உலங்களித் தாடுபாம்பே, 3
மண்டலத்தைத் தாங்குமித வல்லமை
கொண்டாய்
மாயனுக்கும் படுக்கைக்கு வண்ணப்பா
யானாய்
கண்டபடை நடுங்கிடக்காட்சியும்பெற்றாய்
கண்ணேசெவி யாகக்கொண்டாடுபாம்
பே
சந்திரனைச் சூரியனைத் தாவித்தீண்டினாய்
சங்கரனுக் காபரணந் தானுமாகினாய்
மந்திரத்திற் கடங்கினாய் மண்டலமிட்டாய்
வளைந்து வளைந்துநின் றாடுபாம்பே. 5

மேலே கூறிய கவிகளில் வர்ணித்திருக்குமாறு அருமைமது தெய்வங்களை அணைவரையும் வளைத்துக்கொண்டது. இதை ஆங்கில நாட்டு ஆசிரியர் ஒருவர் ஒருவர் மிக அழகாக வர்ணித்திருக்கிறார். எத்தனை உவமைகள் அவருக்குத் தோற்றுகின்றன! வழவழப்பான வெளிச்சமே, நிலத்தில் மெல்லென மிதந்துசெல்லும் படகு, காற்று எழுப்பாத அலை, சிரித்து ஓடாத நீரோட்டம், ஒலியற்று இயங்கும் வளைபத் தொடர், முறுக்கிய அம்பு, நஞ்சு தோய்ந்த உயிர், வீசி எறிந்த ஈட்டி—என்றெல்லாம அவர் பாம்பை வர்ணிப்பதைப் படிக்கும் போது காமும் நமது இயற்கையாக உள்ள அச்சத்தை ஒதுக்கிவிட்டுப் பாம்பின அழகில ஈடுபடுகிறோம். ஹாஸ்யச் சுவை ததும்ப அதனாவன பயனைப்பற்றி அவர் ஆராயும் போது, பாம்பின பயங்கரச் செயலானது நமக்குச் சிரிப்பூட்டுகிறது!

(வரும்) —செந்தமிழ்.

## சங். பிதா லீக்காக் மரணமடைந்தவிபரம்

சென்ற 16ம் தேதி மோட்டார் விபத்தில் மாணமான சங். பிதா லீகாக்கின் பிரேதத்தின்மீது மரண விசாரணை நடைபெற்றது. விசாரணை இறுதியில் தொடர்ந்து புலன் விசாரணைநடத்தி மார்ச் 21ம்தேதி கோட்டில் சாட்சியமளிக்கும்படி பொலிசாருக்கு மரணவிசாரணை அதிகாரிதெரிவித்தார்.

திரு. எல். செனிவிரத்ன என்ற ஒரு சட்டகல்லூரி மாணவர் தமது வாக்குமூலத்தில பின்வருமாறு கூறினார்:—

வெள்ளிக்கிழமை பிற்பகல் ஏறக்குறைய 2 மணிக்கு நான் யூனியன் பிளேஸிலிருந்து வார்டு பிளேஸை நோக்கி சைக்கிளில் போய்க்கொண்டிருந்தேன். அப்பொழுது இரண்டு கார்கள் மோதிக்கொண்டதை நான் கண்டேன்; இரண்டு கார்களும் முதலில் மோதிக்கொள்ளாமல் தடுக்க வளைந்துவளைந்து சென்றுவிட்டு பிறகு தான் மோதிக்கொண்டன; அப்பால பிதா லீகாக்கின் கார் நடைபாதையோரமாக நிறுத்தப்பட்டது; நான் ஓடிப்போய்ப் பார்த்தபொழுது சங். பிதா லீகாக் நடைபாதை ஓரமாக விழுந்துகிடப்பதைக் கண்டேன்; ஒரு கைவண்டியும் ஒரு சைக்கிளும் சேதமடைந்ததையும் நான் பார்த்தேன். உடனே நான் கருவாக்காடு பொலிஸ் ஸ்டேஷனுக்கு டெலிபோன் செய்து விபத்தை நான நேரில் பார்த்ததையும் தேவையானபொழுது சாட்சியம் கூறுவதாகவும் அறிவித்தேன்.

அப்பால் இன்ஸ்பெக்டர் எச். இடோவைசி திரு எஸ். வ. ஜேம்ஸ் பெரைரா என்ற வர்த்தகர் முதலியோர் சாட்சியம் அளித்தனர். கார் விபத்தினால ஏற்பட்ட மரணமென்று இறுதியில தீர்ப்பு கூறப்பட்டது.

சங். பிதா லீகாக் 1881ம் வருடம் பெப்ரவரிமாதம் பிறந்தார்; 1914ம் ஆண்டில அவர் இலங்கைக்கு வந்து செயின்ட் ஜோஸப்கல்லூரியின்டிரெக்டராக 1919ம வருடம முதல் கடமையாற்றத் தொடங்கினார். இப்பதவியினை 194 ம வருடம் அவர் ஓய்வு எடுத்துக் கொண்டதும் கொழும்பு ஆர்ச்பிஷப்பாலே விகார் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருக்கிறார். கல்வி முன்னேற்றத்துக்காக அரும்பாடுபட்டு சேவை புரிந்தவர்களுள் சங். பிதா லீகாக் முக்கிய ஸ்தானம வகித்தவராவர்.

## இலட்சுமிகாந்தம் கொலைவழக்கு

2ம் பக்கத் தொடர்ச்சி

இப்படியிருந்ததை அவர் தம்முடைய பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார்; ஊருக்கும் இச்செய்தி தெரியும்; நான் இந்தவழக்கையிட்டொன்றுமறியேன்''

(7) A. இராசபாதர்:— "என் சாட்சிகளையும் நான் இங்கே விசாரணை செய்ய விரும்பவில்லை; இந்த வழக்கில் என்னை அநியாயமாகப் பந்தித்தார்கள்; இலட்சுமிகாந்தத்தை நான் அறிவேனென்றதும் பொய்''

நீதிபதி:- இலட்சுமிகாந்தத்தை உனக்குத் தெரியாதா?—தெரியாது; அவரை மாத்திரமல்ல இந்த வழக்கிலே சம்பந்தப்பட்ட ஏனைய எதிரிகளையும் நான் அறியேன்; நீதிதலத்திற்கு வந்தபிறகுதான் நான் இவர்களை அறிவேன்; நான் செம்மலைப் பகுதியில் வசிக்கிறேன்: இந்நாதான உணவுப் பொருள் விருத்திச் சமுதாயத்தில் நான ஒரு மேஸ்திரி; என் மாசவேதனம் 55 ரூபா''

(8) P. ஆறுமுகமுதலி:- "என் சார்பான சாட்சிகளையும் இங்கே விசாரணைக்குவிட எனக்கு இஷ்டமில்லை; நான் இலட்சுமிகாந்தத்துடைய ஒரு நண்பன்; நாங்களிருவரும் ஒரேதெருவிற்றான் வசித்தோம; எனக்கும் அவருக்குமிடையே எவ்விதமான பகைமையுமில்லை; சென்ற நவம்பர்மாசம் 8ம் திகதி நான் துறைமுகத்து வாசலில் காலை 8மணிவரையில என் (பொலிஸ்) காவற்கடமையைச் செய்து கொண்டு நின்றேன்; என்னை மாறிவிட ஆள் வந்தவுடன நான் கொத்துவால பஸார் சந்தைக்குப் போய்ச் சில பண்டங்களை வாங்கிக்கொண்டு "யானைப் படலை" மார்க்கமாக ஒரு 'தரும்'வண்டியில ஏறிக்கொண்டு புரசபாக்கம போய்ச் சேர்ந்தேன்; நான் வீடு போய்ச சேர்ந்தபோது நோம பகல 10 மணி வரையிலிருக்கும்; அன்று முழுவதும வீட்டிலேயேயிருந்தேன்! பிறகு அன்றிரவு 8 மணி வரையில் என் கடமை பார்க்கப் புறப்பட்டுப் போனேன; அந்த் காலை சமபந்தமாக நான ஒன்றுமறியேன்; பிறகு டிசெம்பர்மாசம 2ம் திகதி கமிஷனர் முன்னாலேற்ற காவலுடன பிடித்துக்கொண்டு வந்துவிட்டார்கள்; அங்கே காவலில வைக்கப்பட்டிருந்தேன்; என்னைச் சிறையிலடைத்தது டிசெம்பர் 26 ஆகும்.

நீதிபதி: டிசெம்பர்மாசம் 26ந்தேதிக்கும் 26ந் தேதிக்கு மிடையில் நீ எங்கேயிருந்தாய்?—மெஷினர் 'ஆபீஸி'லே தானிருந்தேன்; அப்பொழுது பொலிசார் என்னை விசாரணை செய்ய எனக்கொன்றும் தெரியாதென்றேன; ஐயாவைத்தவிரும் கமிஷனருக்கு சென்னையைச் செயலல.''

இலட்சுமிகாந்தம் கொலைவழக்கு ஏப்ரலமீ 2ந் தேதி உயர்தர நீதிமன்றத்தில் விசாரணைக் கெடுக்கப்படுமாம்.

## மகோற்சவங்கள்

நல்லூர்ச் சட்டநாதர் கோயிலென வழங்கும் நல்லைநாத சுவாமி கோயில், காரைநகர்ச் சிவன்கோயில், கொழும்பு பொன்னம்பலவாணேசர் கோயில், கண்டிச் செல்வ விநாயகர் கோயில், மூளாய்முத்துக்குமாரசுவாமிகோயில திருகோணமலை பத்திரகாளி கோயில் ஆகிய ஸ்தலங்களில் இன்று (19.3.45) மகோற்சவங்கள் தொடங்கி நடைபெறும், இரதோற்சவம் பங்குனி மாசம் ௨௯ ந்தேதி செவ்வாய்க்கிழமையும், தீர்த்தோற்சவம் அடுத்த நாளாகிய பங்குனி உத்தர புண்ணிய தினத்தன்றும் நடைபெறும்.

## தேகவியோகம்

### யோகாம்பிகை அம்மாள்

கொல்புரம் பிரமஸ்ரீ K. S. வைத்தியேசுவாக் குருக்களின் புதல்வியும் திருக்கோணமலை வில்லூன்றிக் கந்தசுவாமி கோயிற் பூசகரும் உற்சவாசாரியராகவுமுள்ள பிரமஸ்ரீ இ. கு. பூரணைக்குக் குருக்களின் பிரிய பத்தினியுமாகிய ஸ்ரீமதி யோகாம்பிகையம்மாள், தம்மைச் சிலநாட்களாகப் பீடித்த நோய் காரணமாக, தமது நாயகன் மக்கள் தந்தை இன்னும் நெருங்கிய சுற்றத்தினர் கதறியழ, அயலார் புலம்ப, இந்த மார்ஜமாசம் 7ம தேதி புதன்கிழமை அதிகாலையில இவ்வுலகவாழ்வை பொருவினர். இவ அருந்தம் பெண்களுக்குரிய உத்தம குணங்களனைத்தும ஒருங்கு அமைந்தவர், வருந்தோம்பும இயல்புடையவர்; இவருக்கு இறக்கும்பொழுது வயசு 31; மக்கள் மூன்று ஆண்களும் ஒரு பெண்ணுமாவர்; இவருடைய ஈமக்கிரியைகள் கணவனாலும் ஆண்மக்களாலும அந்தநாட் பல சுற்றம் நண்பர் அயலார் சூழ்ந்திருக்க விதிப்படி சிறப்புறச் செய்யப்பட்டன; இவருடைய ஆவலமரணம் பரிதாபமானது; இவராலாயா சங்கதியடைக.

இவ்வுத்தமியின அபரக்கிரியையில் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபைக்கு நன்கொடையாக வரித்துப்பப ரூபா 5 பெற்றோம். —மனேஜர்.

## ஸ்ரீமான் இராமசாமிச் செட்டியார்

யாழ்ப்பாணத்திலுள்ள புராதன புண்ணிய ஸ்தலங்களு ளொன்றாகிய புலோலிப் பசுபதீசுரர்கோவில் ஆதீனகர்த்தராய் நீடித்தகாலம் பரிபாலனம் நடத்தியவரும் கல்வி அறிவொழுக்கம் தெய்வபக்தி முதலியவற்றிற் சிறந்தவருமாகிய ஸ்ரீமான் இராமசாமிச் செட்டியார் மேற்படி சிவன்கோயிலுக்கணித்தாகவுள்ள தமது இல்லத்தில் தம்மைப் பீடித்த முதுமையோடு கூடிய நோய் காரணமாக தேகவியோகமாயினரென்ற துக்க சமாசாரம் கிடைத்தது. இவருக்கு இறக்கும்பொழுது வயது தொண்ணூறுக்கு மேலிருக்குமென நினைக்கின்றேம்; இப் பெரியாருடைய மூத்த புதல்வர் புலோலியிற் சிறந்த ஆங்கில வைத்தியராக விளங்கும் டாக்டர் விசுவலிங்கமவர்களாவர். ஸ்ரீமான் இராமசாமிச் செட்டியாரின நீடித்த காலத்திற் புலோலிப் பசுபதீசுரர் கோயில பல விசேஷ திருப்பணிகளையும் திருத்தங்களையும் பெற்று விளங்குகின்றது. நித்திய நைமித்திகங்கள் கிரமமாக நடைபெறுகின்றன; இப்பொழுதும் செட்டியாவர்களின புத்திர பௌத்திரர்கள் இச்சிவாலயத்தை விதிப்படி செவ்வனே நடத்தி வருகிறார்கள்; செட்டியாரவர்களுடைய ஆன்மா பசுபதீசுரர் திருவடிநிழலையடைக.

## ஐக்கிய பண்டசாலைகளுக்கு, புடைவை விநியோகம்

இந்த மார்ச் மாசத்தில் இலங்கையிலுள்ள சகல புடைவை விற்பனவு செய்வதற்கு உத்தரவு பெற்ற இலங்கையிலுள்ள சகல ஐக்கிய பண்டசாலைகளுக்கும ஐக்கிய மொத்தப்பண்டசாலையில் புடவைகள் கொடுப்பதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றது.

பெரும்பாலான பண்டசாலைகள் ஒன்றில் இதுவரை புடைவைகள் பெற்றிருப்பார்கள் அல்லது பெறுவதற்கு ஒரு திகதி குறிக்கப்பட்டிருப்பார்கள்.

ஆகவே இதுவரையில் புடைவைபெறாதவர்கள் அல்லது பெறுவதற்கு ஒரு திகதி குறிப்பிடப்படாதவர்கள் தாங்கள் புடைவை பெறும் ஐக்கிய மொத்தப் பண்டசாலையின் அதிகாரியைச் சந்தித்து இம் மாதம் முடிவதற்குமுன் தங்கள் புடைவைப்பங்கைப் பெறுவார்களாக.

C. இரகுநாதன்,
ஐக்கியமுன்னேற்றக்கொம்மிஷனருக்காக.
கொழும்பு, 17-3-45
G 127 19, 22, 26-3-45

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேமிப்பது செலவழிப்பதற்கே

1ம் பக்கத் தொடர்ச்சி

நடத்தப்படுகின்றது. ஏராளமான ஆட்களைக்கொண்டு தொழிற்சாலைகளை வேலை செய்யாமல் இந்தத் தளவாடங்களை உற்பத்தியாக்க முடியாது; இந்த வேலைகளில் ஏராளமான ஆட்களை உபயோகித்தால் குடிசனங்களின் வேலைகளில் ஆட்பஞ்சம் ஏற்படுவது இயற்கை. பிரிட்டிஷ் அரசாங்கம் ஏராளமான பணத்தைச் செலவிட்டும் விலைவாசிகளை ஏன் வெகுவாக உயர்த்தவில்லையென்று நீங்கள் கேட்கலாம். அரசாங்கத்திலிருந்து செலவிட்டுப் புழக்கத்தில்வரும் பெரும் பகுதிப்பணம் வரிகளினாலும், யுத்த சேமிப்புப் பத்திரங்களினாலும் அரசாங்கத்துக்கே திரும்பி விடுகிறது. இது காரணமாக சனங்கள் அதிகமாகச் செலவிடாமல் விலைகளும் பெருகாமல் இருக்கின்றன. மிக்க தீவிரமான கட்டுப்பாட்டு முறையும் செலவிடும் சந்தர்ப்பங்களைக் குறைத்துவிட்டன. இது பிரிட்டனிலுள்ள நிலைமை.

இலங்கையிலோ நிலைமை முற்றிலும் வேறாக இருக்கிறது. இங்கு ஐக்கிய நேசநாடுகள் ஏராளமான தொகையைச் செலவிடுகின்றன. ஆனால் அந்தத் தொகை வரிகளினாலோ அல்லது சேமிப்பு நிதிகளினாலோ முற்றிலும் அரசாங்கத்தின் கைக்குத் திரும்பவில்லை. சேமிப்பு இயக்கம் இலங்கையில் வெற்றிகரமாக நடக்காவிடில் பலவிதமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும். யுத்தத்தை நடத்த இலங்கை அரசாங்கத்தாருக்குப் பெருந்தொகை தேவைப்படாமலிருக்கையில் அரசாங்கத்தார் ஏன் மேலும்மேலும் கடன் வாங்கிக்கொண்டே போக வேண்டும் என்று சிலர் வினவலாம். அரசாங்கம் இவ்விதம் செய்வது விலைவாசிகள் உயருவதைக் கட்டுப்படுத்துவதாயிருப்பதோடு பொது ஜனங்களுக்கும் நன்மைபயப்பதாயிருக்கும். ஐக்கிய நேச நாடுகள் இலங்கையில் பெருந்தொகையைச் செலவிடுவது நீடித்திருக்காது. யுத்தம் முடிந்ததும் இதுவும் தடைப்பட்டு நின்றுவிடும். அப்பொழுது ஜனங்கள் வசம் அதிகப் பணமிருக்காது. இப்பொழுது அவர்கள் சேமிக்கும் பணம் வருங்காலத்துக்குப் பெரிதும் உதவுவதாயிருக்கும். சேமிப்பது என்பது உண்மையில் செலவிடுவதுதான். அதாவது சேமிப்பவர்கள் செலவிடுவதை ஒத்திவைக்கிறார்களேயன்றி எப்பொழுதும் செலவிடாமலே யிருந்துவிடப்போவதில்லை. தற்சமயம் ஏற்பட்டுள்ள அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் செலவிடுவதை ஒத்திவைப்பது பொதுஜனங்களுக்குப் பெருநன்மை புரிவதாயிருக்கும்.

---

## யாழ்ப்பாணத்தில் பிரசவ விடுதி

சென்ற வெள்ளிக்கிழமை கூடிய யாழ்ப்பாண நகரசபையின் விசேஷ கூட்டத்தில், மாநகர வைத்திய அதிகாரியாயிருந்து இளைப்பாறியடாக்டர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள் இங்கு ஒரு கிரகதாரமான பிரசவ விடுதி கட்டுவதற்காக ரூபா 10,000 நன்கொடை கொடுக்கச் சம்மதித்திருப்பதாக நகரசபைத்தலைவர் திரு. க. பொன்னம்பலம் அறிவித்துள்ளார்.

## ஐக்கிய சங்கங்களுக்கு அறிவித்தல்

ஐக்கிய சங்கங்களின் பரிபாலனம் சம்பந்தமாகக் "ஐக்கிய முன்னேற்றம்" என்னும் ஒரு புதிய கந்தோர் ஸ்தாபிதஞ் செய்யப்பட்டிருக்கிறது. இப்புதிய கந்தோருடன் ஐக்கிய சங்கப் பதிவு காரியஸ்தரின் கந்தோரும் நிலைத்திருக்கும்.

புதிய கந்தோர் இவ்வுள்ள வேறு பல வேலைகளுடன் ஐக்கிய மொத்தப் பண்டசாலைகளின் பராமரிப்பையும் தாங்கியிருக்கும். ஆகவே, இலங்கை முழுவதுமுள்ள சகல ஐக்கிய மொத்தப் பண்டசாலைகளுக்கும் பொறுப்புள்ளது இப்புதிய கந்தோரைப் பொறுத்ததாயிருக்கும்.

இனிமேல், ஐக்கிய பண்டசாலைகளுக்குப் பொருள்களைப் பெறுவது சம்பந்தமான சகல கடிதங்களும் "கோவோ பெறேற்டிவ் டிவெலொப்மன்ற்" தபால்பெட்டி 414 கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதப்படல வேண்டும்.

ஆயின், ஐக்கியசங்கப்பதிவு வளர்ச்சி முதலியன யாவையும் பற்றிப் பதிவு காரியஸ்தருக்கே (Registrar) கடிதம் எழுத வேண்டும்.

ஜீ. டீ. சொய்ஸா,
ஐக்கிய முன்னேற்றக் கொம்மிஷனர்.

G 126, 19&22.3.45.

---

## தேவை

1945ம் ஆண்டு வைகாசிமாதம் தொடக்கம் அநுராசபுரம் விவேகானந்த வித்தியாலயத்திற்கு ஆங்கிலம் S. S. C பரீட்சையிற் சித்தி பெற்றவரும், தமிழிற் பயிற்றப்பட்டுத் தராதரப்பத்திரம் பெற்றவருமாய ஓர் ஆசிரியர் தேவை. கல்வி பயிற்றும் அனுபவமும், சங்கீதத் திறமையுமுடையவரின் விண்ணப்பம் விசேஷமாகக் கவனிக்கப்படும்.

விண்ணப்பஞ்செய்வோர் கீழ்க்காணும் விலாசத்திற்கு 15.4.45க்கு முன் விண்ணப்பங்களைத் தங்கள் நற்சாட்சிப் பத்திரங்களுடன் அனுப்பிவைத்தல் வேண்டும்.

வித்தியாலயக் காரியதரிசி,
விவேகானந்தசபை
அநுராசபுரம்

Mis 338 15&19.3.45.

---

## அறிவித்தல்

காரவெட்டி மேற்கு பொன்னம்பலம் சிதம்பரம் ஆகிய யான் எனது சீதன உறுதி 1-10-44 தொடக்கம் இன்றுவரையும் தேடியும் காணப்படவில்லை, அதை ஆதாரமாகக் கொண்டு எனது கையொப்பமிட்டு எவராயினும் எவ்வகையான சாதனத்தை முடித்தாலும் அது பெறுமதியற்றதாகுமென்றும் யான் இதுவரையும் குறித்த சீதனவுறுதியை ஆதாரமாகக்கொண்டு ஒருவகை சாதனத்திற்கும் கையொப்பமிடவில்லையென்றும் வெளிப்படுத்துகிறேன்.

பொ. சிதம்பரம்

கரவெட்டி மேற்கு, 10-3.45

(Mis. 343, 19-3-45)

---


## இந்துசாதனம்

### பத்திரிகைக் கிரயம்

ஒருவருடத்திற்கு

யாழ்ப்பாணப் பட்டின எல்லைக்குள் ஆள் மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ் |
| --- | --- | --- |
| ரூ. ச. 6 50 | ரூ. ச. 6 50 | ரூ. ச. 10 50 |

இந்தியா இலங்கை தபால் மூலம்

| ஆங்கிலம். | தமிழ். | ஆங்கிலம் தமிழ். |
| --- | --- | --- |
| ரூ. ச. 9 50 | ரூ. ச. 9 50 | ரூ. ச. 13 50 |


---

## காமன்ஸ் தேர்தலுக்கு இந்திய அபேட்சகர்

பிரிட்டனில் அடுத்த பொதுத் தேர்தல் நடக்கும்போது பார்ன்ஸ்டேயின் தொகுதிக்கு ஒரு அபேட்சகராக திரு ஸ்ரீ பி. எம். பட்டேல் இசைந்துள்ளார். இத்தொகுதியில் கனவர்வேடிவ், லிபரல், தொழிற்கட்சி அபேட்சகர்களும் போட்டியிடுவர்.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

### திங்கள் மார்ச் 19

காலை: 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 திருவிளையாடற் கீர்த்தனைகள் 8.15 ஆங்கிலத்தில் செய்திகள் 8.30 முடிகொண்டான் எ இராஜமாணிக்கம் பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஏ வெய்டேசன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 முடிகொண்டான் எ இராஜமாணிக்கம் பிள்ளை 5-40 இசைப் பயிற்சி 6 தனம்மாள் வீணை † 6.15 இலக்கிய வாசகம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 திரைகானம் † 7-30 அறிப்புகள் 7-35 வம்பு வேண்டாம் 7-45 தமிழில் செய்திகள் 8 மஹாராஜபுரம் விச்வநாத ஐயர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 45 10 05 இசைக் கதம்பம் 10.30 முடிவு.

### செவ்வாய் மார்ச் 20

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 சூடாமணி 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 டி. கே நடராஜ பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 குன்னக்குடி வி வெங்கடராமய்யர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 டி கே நடராஜ பாகவதர் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 குன்னக்குடி வி வெங்கடராமய்யர் புல்லாங்குழல் 6-30 ஆங்கிலத்தில்செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7 15 நாமும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7.35 அருட்பா † 7-45 தமிழில் செய்திகள் 8 மகாராவில் உள்ளபடி 9 சந்தோஷ வேட்கை 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 குழந்தை குரல் இசை 10 இசைவேளை † 10 30 முடிவு.

### புதன் மார்ச் 21

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 ரிஸ்யசிருங்கர் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே ஜோசப் பாட்டு 9 முடிவு.

1.00 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஜோஸப் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 எம் கே கமலாம்பாள் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 கே ஜே ஜோஸ் கில்ரூபா 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 6-15 புனர்ச்சர்


# சேலம் பீடி

யாழ்ப்பாணத்திற்கென்று விசேஷமாக சேலத்தில் தயார்செய்த

## 'பூக்கூடை மார்க்கு'

பீடிகள் தற்சமயம் வந்திருக்கிறது.

இந்தபீடி மணத்தாலும் குணத்தாலும் மேலானது, சேலத்தில் தயாராகும் பீடிகளில் முதன்மையானது

எங்கும் எல்லா வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒருமுறை வாங்கி உபயோகித்துப் பாருங்கள்

சிலோன் ஏஜண்டு:

C. S. நடராஜா செட்டியார்,
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

Mis 1-3 to 3-7-45



## விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை


மாணக் கொள்கைகள் 7.30 அறிப்புகள் 7-35 டி வி கிருஷ்ணமூர்த்தி பாட்டு 7-45 தமிழில் செய்திகள் 8 புத்தக விமர்சனம் 8-15 நான்கு வயலின்கள் 9 எம் கே கமலாம்பாள் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 மக்களுக்குப் பால் உணவு 10 ஐரோப்பிய சங்கீதம் 10-30 முடிவு.

### வியாழன் மார்ச் 22

காலை: 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 ராசம் புஷ்பவனம் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே சுப்பிரமணியம் வீணை 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே ஆர் நாகபூஷணம் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 கே சுப்ரமணியன் வீணை 5-40 இசைப்பயிற்சி 6 கே ஆர் நாகபூஷணம் பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6.40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 குடிசைத் தொழில் 7-30 அறிவிப்புகள் 7-35 டி பூவராகமன் கிளாரினெட் † 7-45 தமிழில் செய்திகள் 8 மனோஹரா நாடகம் 9.15 வாத்ய இசை † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இரு வயலின்கள் 10 இசை வேளை † 10-30 முடிவு.

---


## மாதருக்கு ஒரு வரப்பிரசாதம்

### டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா"

அகாலப்பிரசவத்தை முற்றாகத்தடுத்து பாதுகாப்பும் சௌக்கியமுமான சாதாரண பிரசவத்தை உறுதியாக ஏற்படுத்துவதற்கு ஒரு அற்புதமான கைகண்ட தைலம்.

டாக்டர். எஸ். சி. பாலின் "சாந்தன் றக்ஷா" கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஆரம்பத்திலேயே பரிகாரமான வியாதிகளாகிய வாந்தி, (காலை வியாதி) முதலியவற்றைத் தடுத்து மற்றும் நாட்சென்ற கர்ப்ப வியாதிகளைக் குணப்படுத்துவதுமல்லாமல் இரத்தக் கசிவைக் கட்டுப்படுத்தி, நச்சுக்குடலிலிருந்து இரத்தக்கறையையும் பல சிக்கல்களையும் கர்ப்பப் பையில் புகுந்து அதனிமித்தம் அபாயகரமான இரத்தக்கேடு உண்டுபண்ணவிடாமல் காப்பாற்றுகிறது.

மேற்படி தைலத்தை வெளிப்பூச்சுக்கு மட்டுமே உபயோகிக்கலாம், மாதரின் கர்ப்ப காலங்களில் இத்தைலம் விலைமதிக்கத் தகாத ஒரு வரப்பிரசாதமாகும். நூற்றுக்கணக்கான எதிர்பாராத சிபார்சுக் கடிதங்கள் பார்வைக்கிருக்கின்றன.

ஒரு ஸ்டாண்டார் சைஸ் போத்தல் விலை ரூபாய் 4—75.

டாக்டர். எஸ். சி. பால அண்டு சன்ஸ், கல்கத்தா.

ஏக விநியோகஸ்தர்கள்:

கொனிஸரறி ஸ்டோர்ஸ், 59 சாய்ப்புத்தெரு கொழும்பு.

யாழ்ப்பாணத்தில்: ஓரியண்டல இம்போட்கம்பெனி
28, நம்பர் சாய்ப்புத தெருவில் பெற்றுக்கொள்ளலாம்.

H. 131 12-10.44—


---

வானமுகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday, 19, March, 1945.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org